# DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 47/2015**

Deposition of Witness for Prosecution : P.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாப்பு (எ) வடிவேல் | Father's/ Husband Name | : | வைரப்பன் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 13.08.2019.

முதல் விசாரணை -

நான் தென்னம்புலம் அண்ணாநகரில் வசித்துவருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் சாட்சி லெனின் எனது மருமகன். சாட்சி வனிதா என்னுடைய மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் ஊரை சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தியாகராஜன் என்பவரிடம் மேற்படி லெனின் கார் டிரைவராக வேலைப்பார்த்து வந்தார். என்னுடைய மகள் வனிதாவிற்கும் சாட்சி லெனினுக்கும் 2003ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பிருந்தே சாட்சி லெனின் மேற்படி தியாகராஜனிடம் வேலை பார்த்துவந்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும் தியாகராஜனுக்கும் இடையே உள்ள அரசியல் உறவு பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்குள் விரோதம் இருந்ததா என்று எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 2003ம் ஆண்டிற்கு முன்னர் தென்னம்புலம் தியாகராஜனும் இவ்வழக்கின் 1 வது எதிரி ராஜசிம்மனும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள் என்றும், அதன் பின்னர் அவர்களுக்குள் மனவருத்தம் ஏற்பட்டது என்றும், கடந்த 2003 ம் வருடம் 1 வது எதிரி ராஜசிம்மன் மற்றும் அவர்களது கூட்டாளிகளும் தியாகராஜனை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்றும், தியாகராஜன் அதிலிருந்து தப்பிவிட்டார் என்றும், அதனால் அவர்களுக்குள்

விரோதம் ஏற்பட்டது என்றும், என் மருமகன் லெனின் தியாகராஜனிடம் கார் ஓட்டுநராக இருந்ததால் என் மருமகன் மீது ராஜசிம்மன் விரோதமாக இருந்தார் என்றும், கடந்த 14.02.2007ந் தேதி அன்று என் மகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் என் மகளை மருமகன் லெனின் சுமோ காரில் திருத்துறைப்பூண்டியில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அப்போது சுமார் 06.30 மணி அளவில் நான் என் வயல் வெளியில் நின்றுகொண்டிருந்தபோது என் மருமகன் ஓட்டிவந்த டி.என். 49 கே 7492 சுமோ கார் என் வயல் அருகே முன்னால் வந்துகொண்டிருந்த போது அதன் பின்புறம் எதிரி ராஜசிம்மனின் கார் அதனை தொடர்ந்து மற்றொரு இண்டிகா கார் வந்து கொண்டிருந்தது என்றும் ராஜசிம்மன் ஓட்டிவந்த கார் என் மருமகனின் காரில் மோதி நின்றது என்றும் , அப்போது 3 காரிலிருந்தும் ஆஜர் எதிரிகள் அனைவரும் கையில் அரிவாள், கத்தி, மற்றும் கிரிகெட் பேட் ஆகியவற்றால் என் மருமகனின் காரை அடித்து நொறுக்கினார்கள் என்றும், என் மருமகனை அடித்து தாக்கினார்கள் என்றும், ராஜசிம்மன் தன் கையில் வைத்திருந்த கம்பியால் இத்தோடு தொலைந்து போ என்று கூறிகொண்டு என் மருமகனின் தலையில் அடித்தார் என்றும், அதனால் அவர் தலையிலிருந்து ரத்தம் கொட்டியதாகவும், அப்போது என் மகள் தன் கணவனை கொன்றுவிடாதீர்கள் என்று கெஞ்சியதால் நானும் சத்தம் போட்டேன் என்றும். அப்போது ராஜசிம்மன் வாங்கடா தியாகராஜனை கொலை செய்வோம் என்று கூறிக்கொண்டு காரில் ஏறியதாகவும், மற்ற எதிரிகளும் காரில் ஏறிக்கொண்டதாகவும், அவர்கள் தியாகராஜன் வீடு நோக்கி சென்றவுடன் நான் ஒரு காரில் என் மருமகன் மற்றும் மகளுடன் சென்று திருத்துறைப்பூண்டி பெஸ்ட் மெடிக்கல்ஸ் என்ற மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும் இந்த சம்பவம் என் மனைவி மற்றும் பாலையன்னுக்கு தெரியும் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.